அன்புள்ள பெற்றோரே/பாதுகாவலர்களே,

இந்த மாகாணம் மற்றும் அறங்காவலர் சங்கங்களது கவுன்சிலுடனான சமரசப் பேச்சுவார்த்தைகள் மூலம் ஒரு புதிய கூட்டு ஒப்பந்தம் செய்யப்படாவிட்டால், (CUPE) அதனுடைய அங்கத்தவர்கள் **அக்டோபர் 7, 2019 திங்கட்கிழமை** அன்று மேலதிக தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என கனேடியப் பொது ஊழியர் சங்கம் அறிவித்திருப்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். **இந்தப் புதிய தொழிற்சங்க நடவடிக்கையானது சேவைகளிலிருந்து முற்றாக விலகியிருக்கும் ஒரு நடவடிக்கையாகும். இது ஒரு வேலை நிறுத்தம் அல்லது வெளிநடப்பு என அழைக்கப்படும்.** 18,000க்கும் மேற்பட்ட ஊழியர்கள், அதாவது ரொறன்ரோ பாடசாலைச் சபை ஊழியர்களில் ஏறக்குறைய அரைவாசிப்பேர் இந்த வேலை நிறுத்தம் நீடிக்கும் காலப்பகுதியில் பணிபுரிய மாட்டார்கள். இந்த ஊழியர்களில் பெரும்பாலானோர் பாடசாலைகளில் பணிபுரிபவர்கள்.

இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை திட்டமிடப்பட்டவாறு ஆரம்பிக்கப்பட்டால், இந்தக் கல்விச் சபை **அக்டோபர் 7, 2019 திங்கட்கிழமை அன்றும் இந்த தொழிற்சங்க நடவடிக்கை நீடிக்கும் வரையும் மாணவர்களை உள்ளெடுக்காது அனைத்துப் பாடசாலைகளையும் மூடிவிடும்.** இது ஒரு சவாலான நேரம் என்பதை நாங்கள் புரிந்துகொள்ளும் அதேநேரத்தில், பெற்றோர் தமது பிள்ளைகளுக்காக மாற்று ஒழுங்குகளைச் செய்யுமாறு வேண்டப்படுவார்கள். இது நாங்கள் இலகுவாக எடுத்த முடிவல்ல, பாடசாலைகளைத் திறந்து வைத்திருப்பதற்கான ஒவ்வொரு இடையேற்பாட்டுத் திட்டத்தையும் நாங்கள் ஆராய்ந்துள்ளோம். மாணவர்கள் மேற்பார்வையிடப்படுவதும் அவர்களது பாதுகாப்பும் எங்களது முன்னுரிமைகளாகும். அத்துடன் பாடசாலை சார்ந்த இந்த ஊழியர்களுடைய முக்கிய சேவைகள் இல்லாமல், எங்களுடைய கற்கைச் சூழல்கள் அனைத்து மாணவர்களுக்கும் பாதுகாப்பானதாகவும் தூய்மையானதாகவும் இருக்குமென்பதற்கு எங்களால் உத்தரவாதமளிக்கமுடியாது.

கனேடியப் பொது ஊழியர் சங்கத்தின் (CUPE) அங்கத்தவர்களாக இருக்கும் ஊழியர்கள் பின்வருவன உள்ளடங்கலான (இவை மட்டுமே என்ற வரையறை இல்லாத) முக்கிய நாளாந்த சேவைகளை வழங்குகின்றனர்:

- கட்டிடம் மற்றும் பாடசாலைச் சூழல் பாதுகாப்பும் உத்தரவாதமும்;
- மதியஉணவு அறை மேற்பார்வை;
- முழுநேரப் பாலர் வகுப்பறைகளில் கல்விரீதியான ஆதரவு;
- விசேட தேவைகள் உள்ள மாணவர்களை மேற்பார்வை செய்தலும் ஆதரவளித்தலும்;
- தண்ணீர் பாதுகாப்புச் சோதனைகள்;
- கழிவறை மற்றும் நீர்த்தாரை (water fountain) துப்புரவாக்கல்;
- வெப்பமூட்டி அமைப்புச் செயல்முறைகள்; மற்றும்
- பாதுகாப்பான வருகைத் திட்டங்கள்

இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையின்போது, CUPEஐச் சாராத அனைத்து ஊழியர்களும் பாடசாலைகளிலும் நிர்வாக மையங்களிலும் தொடர்ந்து வேலைக்குச் சமூகமளிப்பார்கள்.

திங்கட்கிழமை வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டால், மாணவர்களை உள்ளெடுக்காது பாடசாலைகள் மூடப்படுவதுடன், பின்வரும் திட்டங்களும் சேவைகளும் பாதிக்கப்படும்:

**TDSB பாடசாலைகளில் மூன்றாம் தரப்பு உரிமம்பெற்ற பிள்ளைப் பராமரிப்பு வழங்குவோர்**
இந்த வேலை நிறுத்த நடவடிக்கைக் காலப்பகுதி பூராவும் மாணவர்களை உள்ளெடுக்காது பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும்போது, TDSB பாடசாலைகளில் அமைந்திருக்கும் மூன்றாம் தரப்புப் பிள்ளைப் பரரமரிப்பு வழங்குவோர் தொடர்ந்து திறந்திருப்பதற்கு அனுமதிக்கப்படுவர். எனினும், செயற்படும் நேரங்கள் **காலை 8 மணிமுதல் பி.ப. 4:45 மணிவரையென** மாற்றியமைக்கப்பட்டுள்ளது. **திறந்திருப்பது மற்றும் மூடுவது பற்றிய தீர்மானம் தனிப்பட்ட பிள்ளைப் பராமரிப்பு வழங்குநர்களால் எடுக்கப்படும் என்பதைக் கவனிப்பது முக்கியமாகும். இதை உறுதிப்படுத்துவதற்கும் மேலதிக தகவல்களுக்கும் தயவுசெய்து உங்களுடைய பிள்ளைப் பராமரிப்பு வழங்குநருடன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்**.

உரிமம் பெற்ற பிள்ளைப் பராமரிப்பு நிலையங்கள் வழங்கும் அநேகமான சேவைகள் CUPE வேலைநிறுத்தத்தினால் நேரடியாகப் பாதிக்கப்படமாட்டா. எனினும், சில TDSB CUPE ஊழியர்கள் இந்தப் பிள்ளைப் பாமரிப்பு நிலையங்களைத் திறப்பது மற்றும் மூடுவது தொடர்பான பொறுப்பில் இருக்கின்றனர். இந்தப் பங்கைப் பூர்த்திசெய்வதற்காக இருக்கும் மட்டுப்படுத்தப்பட்ட நிர்வாகப் பணியாளர்களுடன், பிள்ளைப் பரரமரிப்பு நிலையங்களைத் திறந்து வைத்திருப்பதற்கு எங்களால் இயன்றவரை முயற்சி எடுக்கின்றோம், ஆனால் மட்டுப்படுத்தப்பட்ட செயற்பாட்டு நேரங்களுடன்.

**TDSB நீடிக்கப்பட்ட பகல் நேர செயற்பாடுகள்**
இந்த வேலைநிறுத்த நடவடிக்கைக் காலப்பகுதி பூராவும் மாணவர்களை உள்ளெடுக்காது பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும்போது, அனைத்துக் குடும்பங்களுக்கும் TDSB இனால் நடாத்தப்படும் நீடிக்கப்பட்ட பகல் நேரச் செயற்பாடுகள் மூடப்பட்டிருக்கும். இந்தப் பிள்ளைப் பராமரிப்புச் சேவை CUPE ஊழியர்களால் வழங்கப்படுகின்றது. தொழிற்சங்க இடையூறு காரணமான அனைத்து மூடுதல்களுக்குமான மீள்கொடுப்பனவு பெற்றோருக்கு /பாதுகாவலர்களுக்கு கொடுக்கப்படும்.
TDSB இனால் நடா த்தப்படும் நீடிக்கப்பட்ட பகல்நேர செயற்பாடுகளின் முழுப் பட்டியலையும் பார்வையிடவும் .

**அனுமதிகள்**
அங்கீகரிக்கப்பட்ட பொழுதுபோக்கு நிகழ்வுகள் உள்ளடங்கலாக அனைத்துப் பாடசாலை அனுமதிகளும் இந்த வேலை நிறுத்த நடவடிக்கைக் காலப்பகுதி பூராவும் இரத்துச்செய்யப்படுகின்றன.

**தொடரும் கல்வி (Continuing Education)**
தொடரும் கல்வி வகுப்புகள் அனைத்தும் இந்த வேலைநிறுத்த நடவடிக்கைக் காலப்பகுதி பூராவும் இரத்துச்செய்யப்படுகின்றன. Adult ESL, (*வயது வந்தோர்* ESL), Adult High Schools (*உயர் நிலைப் பாடசாலைகள்*, Credit Programs, Community Programs/Learn4Life, (*சமூக நிகழ்சிகள்/* Learn4Life) *மற்றும்* International Languages Elementary/African Heritage (*மற்றும் சர்வதேச மொழிகள் ஆரம்பநிலை/ஆபிரிக்க பாரம்பரியம்*)ஐ இது உள்ளடக்குகின்றது.

**கூட்டங்கள்**
பின்வரும் கூட்டங்கள் இந்த வேலைநிறுத்த நடவடிக்கைக் காலப்பகுதி பூராவும் இரத்துச்செய்யப்படும்: பாடசாலை கவுன்சில் கூட்டங்கள், ஆலோசனைக் குழுக் கூட்டங்கள் மற்றும் வட்டாரக் கருத்தரங்குகள்.

இந்த மாகாணச் சமரசப் பேச்சுவார்த்தைகளில் TDSB நேரடியாகச் சம்பந்தப்படாதிருக்கும், அதே நேரத்தில், அக்டோபர் 7, 2019 திங்கட்கிழமைக்கு முன்னர் ஒரு புதிய ஒப்பந்தம் செய்யப்படும் என்ற நம்பிக்கையுடன் இந்த சபை இருக்கின்றது. ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டால், பாடசாலைகள் வழமைபோல திங்கட்கிழமை திறக்கப்படும்.

பெற்றோர்/பாதுகாவலர் அனைவருக்கும் வார இறுதியில் இற்றைப்படுத்தல் ஒன்றை வழங்குவதற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.

தொடரும் புதுப்பித்தல்கள் மற்றும் அண்மித்த தகவல்களுக்குத் தயவுசெய்து தொடர்ந்து www.tdsb.on.ca/labour ஐப் பார்வையிடுவதுடன் Twitterஇல் @tdsb ஐப் பின்தொடருங்கள்.